# இளஞ்சுடர்

...வோம் செய... வோம் - சிகரம் தொடுவோம்

சுடர் 1 ஒளி 2



11.12.1882 - 11.09.1921

தமிழ்த்துறை (அரசுநிதி பிரிவு)

**ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)**

**உடுமலைப்பேட்டை**

Scanned by CamScanner



மாற்றுத்திறனாளி கலைமாமணி திரு.மாசிலாமணி உடன் அவரது துணைவியார்
'உயர்வு உன் கையில்' என்று தன்னம்பிக்கை உரையாற்றுகின்றார்




'மெல்லத் தமிழ் இனி வாழும்' என்று உரையாற்றுகின்றார்
கலைமாமணி திருமதி. ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள்

# இளஞ்சுடர்

சிந்திப்போம் - செயல்படுவோம் - சிகரம் தொடுவோம்

சுடர் : 1 ஒளி : 2
காலாண்டிதழ் அக்டோபர் 2014

ஆசிரியர் குழு
முனைவர். ப. தமிழ்ப்பாவை
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் தமிழ்த்துறை
திருமதி. வி. வசந்தி
துணைப்பேராசிரியர் தமிழ்த்துறை
முனைவர். வே. சேரப்பன்
துணைப்பேராசிரியர் தமிழ்த்துறை
திருமதி. சே. மகேஸ்வரி
துணைப்பேராசிரியர் தமிழ்த்துறை
முனைவர் மா. பே. ஆனந்தி
துணைப்பேராசிரியர் (சுயநிதி பிரிவு) தமிழ்த்துறை

தமிழ்த்துறை (அரசுநிதி பிரிவு)
ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
உடுமலைப்பேட்டை

Scanned by CamScanner

## உள்ளே … …

ஆசிரியர் உரை

பாரதி - அறிந்ததும் அறியாததும் - தமிழ்த்துறை ஆசிரியர்கள்

தமிழ் அறிவோம் - முனைவர் ப. தமிழ்ப்பாவை
இணைப் பேராசிரியர்

கலைமாமணி மாசிலாமணி அவர்களுடன் நேர்காணல்

ஆசிரியர்களின் கவிதைகள்

சிட்டுக்குருவி - முனைவர் கி. மகேஸ்வரி
இணைப் பேராசிரியர்
ஆங்கிலத்துறை

சிந்தனைக்குச் சில - முனைவர் வே. செடிப்பவுன்
துணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை

பாவம் செய்யாதீர் - முனைவர் மா.போ. ஆனந்தி
துணைப் பேராசிரியர்
(நிர்வாகப் பிரிவு)
தமிழ்த்துறை

மாணவியரின் கவிதைகள்

பிறப்புரிமை - செ.க. கீர்த்தனா
இரண்டாமாண்டு கணிதம்

விடியல் - அ. ராஜலெட்சுமி,
இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம்



தேடல் - செ. லட்சுமிபிரியா
முதலாண்டு தமிழ் இலக்கியம்

அன்பு - ப. கலையரசி
முதலாண்டு தமிழ் இலக்கியம்

அன்புத் தோழியே - ஸ்ரீ. செந்தமிழரசி
முதலாண்டு தமிழ் இலக்கியம்

அம்மா - கா. சுமித்திரா
முதலாண்டு தமிழ் இலக்கியம்

இதயம் வலிக்கிறது - ம. நித்யா
முதலாண்டு தமிழ் இலக்கியம்

தாய்மை - ர. மலர்விழி.
முதலாண்டு ஆங்கில
இலக்கியம் (அரசுநிதி)

எல்லாம் அறிவியலே- இரா. ரேணுகாதேவி
முதலாண்டு வேதியியல்

மாணவர்கள் போதும் - செ. பிரியா
முதலாண்டு விலங்கியல்

கல்விச் சுற்றுலா

துறை மேம்பாடுகள்

செந்தமிழ் மன்றச் செயல்பாடுகள்



Scanned by CamScanner

# இளஞ்சுடர்

சுடர் : 1 | சிந்திப்போம் செயல்படுவோம் சிகரம் தொடுவோம் | ஒளி : 2

## நூலாசிரியர் உரை

இளஞ்சுடர் இதழின் இரண்டாவது படைப்பு வெற்றிகரமாக உங்கள் கைகளில் தவழ்கின்றது. மாணவியருக்கென்று தொடங்கப்பெற்றது இவ்விதழ். இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி மாணவிகள் சிறந்த படைப்பாளர்களாகவும், சமூக சிந்தனையாளர்களாகவும் தங்களைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும் என்பதே எம் வேணவா. பிற துறை ஆசிரியர்களின் படைப்புகளையும் சுமந்து வருகின்றது. இவ்விதழ் பாரதியின் சிறப்புகளைப் பேசும் இதழாக மலர்ந்துள்ளது. மகாகவிஞன் பாரதி தமிழுக்குச் செய்த தொண்டினை எவரும் மறத்தல் இயலாது. தாய்மொழிப்பற்று மிகுந்த பாரதியார் பிறமொழிகளிலும் வல்லவராக இருந்தார். மாணவியரும் தாய்மொழியைப் போற்றுவதுடன் பிறமொழிகளிலும் வல்லவராதல் வேண்டும் என வாழ்த்துகிறேன்.

என்றும் தோழமையுடன்
முனைவர் ப. தமிழ்ப்பாவை





## பாரதி - அறிந்ததும் அறியாததும்

- ☆ தாகூரின் கட்டுரைகள், சிறுகதைகளைப் பாரதியார் மொழிபெயர்த்துள்ளார்.
- ☆ பாரதியார் பாப்பாவுக்குச் சொன்ன பல கதைகளை நாடாவில் பதிவு செய்யும் வசதி அன்று இல்லாததால் அவை இன்று நமக்குக் கிடைக்காமல் போய்விட்டன.
- ☆ திருநெல்வேலி கல்லூரியில் ஆங்கிலம் கற்றார்.
- ☆ யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று சொன்ன பாரதியார் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி, உருது, தெலுங்கு, அரபி, மலையாளம், பிரெஞ்சு, வங்காளம், ஜெர்மன், லத்தீன் - போன்ற மொழிகள் அறிந்தவர்.
- ☆ யங் இந்தியா என்ற செய்தித்தாளில் பாரதியின் பல பாடல்களை இராஜாஜி அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.
- ☆ Remarkable Poet என்று இராஜாஜி பாரதியாரைப் பாராட்டியுள்ளார்.
- ☆ பாரதியார் காமன் வீல் என்ற இதழில் The guide of Caste என்ற தலைப்பிலான ஆங்கிலக் கட்டுரையை எழுதினார்.
- ☆ தோடி, பிலகரி, எதுகுலகாம்போதி, வராளி, நாட்டை, தன்யாசி, பைரவி, சக்ரவாகம் எனப் பல ராகங்களைப் பாரதியார் அறிந்திருந்தார். இவற்றைத்தம் பாடல்களில் பயன்படுத்தியுள்ளார்.

முனைவர் ப. தமிழ்ப்பாவை



Scanned by CamScanner

## பத்திரிகை உலகில் பாரதி

| ஆண்டு | பத்திரிகையின் பெயர் | மொழி | வகித்த பதவி |
|---|---|---|---|
| 1904 | சுதேசமித்திரன் | தமிழ் இதழ் | உதவி ஆசிரியர் |
| 1905-06 | சக்கரவர்த்தினி | தமிழ் இதழ் (பெண்கள் இதழ்) | ஆசிரியர் |
| 1906 | இந்தியா | தமிழ் இதழ் | ஆசிரியர் |
| 1906 | பாலபாரதி | ஆங்கில மாத இதழ் | ஆசிரியர் |
| 1920 | சுதேசமித்திரன் | தமிழ் இதழ் | ஆசிரியர் |

வி. வசந்தி

☆ பாரதியின் படைப்புகளில் முதன்முதலில் அச்சாக்கம் பெற்ற நூல் கண்ணன் பாட்டு -

முனைவர் வே. [illegible]

☆ பாரதியைப் பற்றிய முதல் கட்டுரைத் தொகுதி வெளிவந்த ஆண்டு -1963. வெளியிட்டவர் - ப. ஜீவானந்தம்

☆ பாடல் இயற்றத் தொடங்கும்பொழுது அவருக்கு வயது -11

☆ பாரதி உபநிடதங்களில் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர்.

☆ சாருவாகம், பௌத்தம், சமணம், சாங்கியம், நியாயம், வேதாந்தம் ஆகிய அறுவகைத் தரிசனங்களையும் பயின்றவர்.

☆ பாரதி எழுதிய தேசப் பாடல்கள் - 57

☆ பாரதி எழுதிய தோத்திரப் பாடல்கள் - 66

☆ பாரதி எழுதிய வேதாந்தப் பாடல்கள் - 30

முனைவர் மா.பொ. ஆனந்தி





## தமிழ் அறிவோம்

### ஒன்பது - சரியா?

தொண்டு - தொள் + து = தொண்டு - தொள் - தொளை

உடம்பின் தொளைகள் ஒன்பது என்பதால் தொண்டு என்னும் பெயர் ஒன்பதாம் எண்ணைக் குறிக்கக் கொள்ளப்பட்டது.

தொண்டு - தொண்டி - தொளை - 9

தொள் + பத்து - தொண்பது - 90

தொள் + நூறு - தொண்ணூறு - 900

தொள் + ஆயிரம் - தொள்ளாயிரம் - 9000

எனவே ஒன்பது சரியான சொல்லாட்சி அன்று.

தொண்டு - சரியானது.

முனைவர் ப. தமிழ்ப்பாவை

### மாற்றுத்திறனாளி மாசிலாமணி - நேர்காணல்

19.09.2014 வெள்ளிக்கிழமை நடைபெற்ற செந்தமிழ் மன்ற நிகழ்வில் உயர்வு உள் வகையில் என்ற தலைப்பில் தன்னம்பிக்கை உரை ஆற்றிய மாற்றுத்திறனாளி கலைமாமணி மாசிலாமணி அவர்களுடன் செந்தமிழ் மன்ற மாணவச் செயலர் செல்வி பொ. கற்பக மாரியம்மாள் நிகழ்த்திய நேர்காணல்.

ஐயா, தங்கள் அம்மா பற்றிக் கூறவும்.
அம்மாதான் எல்லாம்.

உங்களின் தன்னம்பிக்கையின் வேர் எது?
என் அம்மா ஊட்டிய உணர்வு.

உங்கள் உடல்குறையினை எப்படி எதிர்கொண்டீர்கள்?
குறை என்று வருந்தியதே கிடையாது. குறையை நிறையாக மாற்றி வெற்றி பெற்றேன்.

தாங்கள் வெற்றிக்குத் துணையாக இருந்தது யார்?
திருமணத்திற்கு முன் தாய், திருமணத்திற்குப் பின் மனைவி.



Scanned by CamScanner

தங்களின் இரு மகள்களைப் பற்றி சில வார்த்தைகள்.

அனந்தா, ஷீபா என்று இருமகள்கள். வித்தியாசமான திறமையடைந்தவர்கள். பேச்சாற்றல், நடனம், இசை என்று பல்துறை திறமையடைந்தவர்கள்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றதுண்டா?

ஒரு சில நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளேன். விரைவில் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தோன்றுவேன்.

சமூகப் பணியின் ஆர்வம் வந்தது ஏன்?

சமூகத்திற்கு நாம் ஒவ்வொருவரும் கடமைப்பட்டுள்ளோம். என்னை உருவாக்கிய சமூகத்திற்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்ற உந்துதல் எனக்கு எப்போதும் உண்டு.

தங்களின் வீரமாமுனிவர் அறக்கட்டளை ஆற்றிவரும் சமூகப் பணிகளை பட்டியலிடுங்களேன்......

பேச்சுக்கலைப் பயிற்சி
கணினி பயிற்சி
தட்டச்சு பயிற்சி
தையல் பயிற்சி

இவற்றை இலவசமாக வழங்கி வருகின்றோம். இவை தவிர வேலை வாய்ப்பு, கல்வி, திருமணம் ஆகியவற்றுக்கும் உதவிக்கரம் நீட்டுகின்றோம்.

நன்றி ஐயா எங்களின் வினாக்களுக்கு ஏற்ற விடை தந்தீர்கள். தங்களைப் பார்த்து, பேசி நாங்கள் தன்னம்பிக்கை பலம் பெற்றோம்.



## ஆசிரியரின் கவிதைகள்

### சிட்டுக்குருவி

வானத்து வண்ணத்தில்
சின்னஞ்சிறு சிறகு விரித்து
பறக்கும் சிட்டுக்குருவியே
எங்கே சென்றாய் நீ?
சூரியக்கதிர் வீச்சில் நீ
உன்னைக் கண்டு கொண்டாய்
ஆனால் சிறியவரும் ஒளிக்
கதிர் வீச்சாய் நீ
மறைந்து கொண்டாய்
உன் கீச்சுக் கீச்சுக் கானம்
கானா மறந்தது இச்செவ்வானம்
உன் சிறகுகள் வீழ்ந்தது
இவ்வுலகத்தின் அதிவேக விஞ்ஞானத்தால்
மாறி வருகுதே மாண்டும் பல மாறுதல்களால்
இதனால் ஓ! ஓசோனில் ஓட்டை
பின் மனித வெறுகன்று வேட்டை
எப்பொழுது நாம் காப்போம்
நாம் நம் நாட்டை
நல்லதொரு பண்பாட்டை!

முனைவர் கி. மகேஸ்வரி
ஆங்கிலத்துறை (அரசு நிதி)



Scanned by CamScanner

## சிந்தனைக்குச் சில

1. சமபந்தி விருந்து
ஆண்பெண் சமத்துவத்திற்கு
பந்தியிலே ஆண்கள்
பரிமாறினர் பெண்கள்

2. முடிந்த பயணம்
இனிதே முடிந்தது
பாட்டி மரணம்

3. புல்லின் நுனியில்
பனித்துளி
எதை நோக்கித் தவமோ

4. அப்பா கட்டினார் வீடு
மகன் கட்டினான் வட்டி
பேரன் கட்டினான் கடன்

5. பால் மணம் மறந்தவுடன்
தனித்து வாழ தயார்படுத்திய
தாயாருக்கு நன்றி.
விடுதியிலிருந்து மகன்.

முனைவர் வே. செழியவன்
துணைப் பேராசிரியர் (அரசு நீதி)

### பாவம் செய்யாதீர்

கடமை கண்ணியம் கட்டுப்பாடு
கட்டி அதைத் தூரம் போடும்...

நாவிலிருந்து வரும் வார்த்தை
நானா பேசினேன்... என
வியக்க வைத்துவிடும்...

பேசிய மறுநாள் யோசிக்கையில்
வெட்கித் தலைகுனியச் செய்துவிடும்...



மற்றவர் கேட்பார் என்பதை
மறக்கிறது...
மறுநாள் சிரிப்பார் என்பதை
மறக்கிறது...
புறம் பேசுவார் பிறகு என்பதை
மறக்கிறது...

கட்டுக்கடங்காமல் வருவது அது...
கட்டுப்படுத்துபவன் ஆகிறான் யோகி...
கட்டவிழ்ந்து விடுபவன் ஆகிறான் துரோகி...

இதனோடு எழுபவன்
நஷ்டத்தோடு அமர்கிறான்
என்கிறது பழமொழி...

யூகித்து விட்டீரா?
வேறொன்றுமில்லை... அதுவே
கோபம் என்னும் பாவம்.
ஆதலினால் பாவம் செய்யாதீர்!...

முனைவர் மா. போ. ஆனந்தி
துணைப் பேராசிரியர் - நிர்வாகப்பிரிவு

## மாணவியரின் கவிதைகள்

### பிறப்புரிமை

புல்லையும் படைத்தாய்
அதை
உண்ண ஆட்டையும் படைத்தாய்!
இறைவா.........
உன் படைப்பில் உள்ள குழந்தை
பசிக்கழுகிறது

குழந்தையின் அழுகுரலை கேட்டு
வந்த தாய்
குழந்தையை மடியினில் கிடத்தி

ஊட்டினாள் பாலை
பசியடங்கி குழந்தையும்
உறங்கியது......
தாயோ கண்ணீரோடு கீழே ஊற்றினாள்
மீதமிருந்த கள்ளிப்பாலை
மரணத்தில் ஈன்ற குழந்தையை
மயானத்தில்......
கொண்டு கழித்தாள்!
தானும் பெண் என்பதை மறந்துவிட்டா
ஊட்டினாள் கள்ளிப்பாலை!
பெண்களுக்கு சமஉரிமைவேண்டும் என்று
எதிர்பார்க்கவில்லை!
முதலில் பெண்களுக்கு
பிறக்க உரிமைகொடுங்கள்!

செ.க. கீர்த்தனா
இளங்கலை இரண்டாமாண்டு கணிதம்

## விடியல்

முகவறையில் இரண்டு கல்லறைகள்
வீட்டில் இருந்தது என் உடல் சிலை
பிறப்பில் இறந்தது என் கண்ணின் ஒளி
வளர்ப்பில் இழந்தது என் கண்ணீர்த் துளி
பலரிடம் தேடினேன் அன்பான ஆறுதலை
பாதியில் உணர்ந்தேன் அவரிடத்து மாறுதலை
ஏங்கி அழுதேன் எதிர்பார்த்த அன்பிற்கு
கதறி அழுதேன் கல்விப் பிச்சைக்கு
காலத்தின் கோலத்தால் சிதைந்தது வாழ்க்கை
பாலைவனப் பூப் போல உருகியது எந்தன் உள்ளம்
வினாடிகளை வீணடித்தே கழிந்தது காலம்
விடியலைத் தேடியே விரைகின்றேன நாளும் நான்

அ. ராஜலெட்சுமி
இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம்





## தேடல்

ஒரு நூற்றாண்டை...
ஜெயித்த மாதிரி இருக்கின்றது.
இந்தத் தேடல்கள்.

என் தோழர்களே!
கட்டுப்பாடு இல்லாத
காற்று மாதிரி.

நாளைய உலகிற்கான
நம்பிக்கையைத் தேடுங்கள்.
உங்கள் கையில்தான்...
உலக உருண்டை.
பூமிப்பந்தில் புதைந்து கிடக்கின்ற,
நாளைய கனவுகளைத்
தீயாய்த் தேடுங்கள்.

விழுகின்ற மழைத்துளி
விதைக்குத் தாயாய்.
நதிகள் நடந்தால்...
நம்பிக்கை விளைச்சல்.
காற்றின் சுவாசம்...
உயிர்களின் ஜீவிதம்.
சூரியச் சுடரில்
அழகாய் உலகம்.
நாளை என்பது நமக்காய்த்தானே!

நாம்...
வீழ்கின்ற ஜாதியில்லை.
விண்ணகத்தில், செவ்வாயில்,
சந்திராயன் விடுகின்ற ஜாதி.
கைகளை உயர்த்து
கனவில் நீ விதைத்த
வானம் கூட, உனக்கு



Scanned by CamScanner

தொட்டு விடும் தூரம்தான்.
பயிர் செய், பச்சைவயலாக்கு,
பாட்டாளி நீ, உழவுக்கு வந்தனை செய்,
கற்றல் நமக்கு,
அறிவுசார் ஆற்றல்
கற்றதை விற்பது
களவல்ல, கொள்ளை.
ஆயுதம் செய்.
அறவழியோடு
பூமிப்பந்தை
புதுயுகமாக்கு.

அன்பைச் சொல்ல - நமக்கு
புன்னகை போதும் - நீ
ஆற்றல் மிகுந்த
தேசம் செதுக்கு
உன்னால் முடியும் - புது
உலகினை ஆள,
எந்தையும் தாயும்
மகிழ்ந்து குலாவிய,
இந்திய தேசத்தில்
இனியவை தேடு.
காற்றில், நெருப்பில்
கனிவைத் தேடு.
இமயத்தின் முகட்டில்
எல்லாம் தேடு.
வானம் முழுக்க
வானவில் தேடு.
இனிய என் தோழி
இன்பம் காட்டும் என்னுயிர் நண்பா,
நாளை நமக்காய்...
நம்பிக்கையோடு
உழைப்போம், உயர்வோம்.





உன்னதம் படைப்போம்.
தேனைப் போல திகட்டா
உலகில்,தேடிச் செல்வோம் உண்மைகள்
யாவும்
தேடுதல் என்பது
உண்மையின் நிஜங்கள்

செ. லட்சுமிபிரியா
முதலாண்டு தமிழ் இலக்கியம்

## அன்பு

அன்னையை விரும்பு
அன்பைக் கற்றுக் கொள்வாய்
அமைதியை விரும்பு
ஆத்திரத்தை அடக்கிக் கொள்வாய்
ஆசிரியரை விரும்பு
ஒழுக்கத்தை உணர்ந்து கொள்வாய்
இயற்கையை விரும்பு
இன்பத்தை அடைந்து விடுவாய்
கல்வியை விரும்பு
முதலிடத்தை எட்டி விடுவாய்
முதியோரை விரும்பு
முழுவதும் அறிந்து விடுவாய்
உலகத்தை விரும்பு
அனுபவத்தை அடைந்து விடுவாய்
சிரிப்பை விரும்பு
சுகமான வாழ்வு பெறுவாய்
நண்பர்களை விரும்பு
நட்பைக் கற்றுக் கொள்வாய்
அன்பு செலுத்த விரும்பு - நீ
அகிலத்தையே ஆட்கொள்வாய்

ப. கலையரசி
முதலாண்டு தமிழ் இலக்கியம்

## அன்புத் தோழியே

அன்பார்ந்த தாய்க்கும்
பண்பார்ந்த தந்தைக்கும்
அறிவார்ந்த ஆசானுக்கும்
ஆற்ற வேண்டிய
கடமையை
எண்ணிப் பார்த்தால்
கனவிலும் கூட
காதல் வராது......

ஸ்ரீ. செந்தமிழரசி
முதலாண்டு தமிழ் இலக்கியம்

## அம்மா

என் கோவில் தாயின் கருவறை...
என் பள்ளி அன்னையின் மடி...
என் உலகம் அம்மாவின் முகம்...
என் உயர்வு என் தாயின் காலடி...
என் தெய்வம் அம்மா...
என் கவிதை அம்மாவே! என் அம்மா!

கா. சுமித்திரா
முதலாண்டு தமிழ் இலக்கியம்

## இதயம் வலிக்கிறது

பூலோக சொர்க்கமே
நீ சிரித்தால்
சப்த ஸ்வரங்களும்
சப்த மற்று போய்விடுகிறது!
ம்ம்ம்மா... ம்ம்மா... ம்மா...
ப்ப்ப்பா... ப்ப்பா...ப்பா...

உன் கவிதைக்கு
அர்த்தம் தேடியதில்





உலகத்து அதிகாரங்கள் எல்லாம்
அச்சழித்த வெற்று காகிதமாய்
அர்த்த மற்று தெரிகிறது!
தேனீக்கள் சேகரித்த தேன்
உன் உமிழ் தேனின் முன்
சுவையற்று போய் விட்டது!
உன் பிஞ்சு விரல் படும் போது
ஒரே நேரத்தில்
ஓராயிரம் வீணைகள்
என் உடம்பிற்குள் மீட்டப்படுகின்றது!
உலகத்து மொழிகள் எல்லாம்
உன் மழலை மொழியின் முன்
அனர்த்தமாய் ஒலிக்கிறது!
நடராஜன் நாணுகிறான்
உன் கை அசைவையும்
உன் கால் அசைவையும் கண்டு...!

நீ விழித்திருக்கும்
நேரமெல்லாம்
பூகம்பத்தில் சிதறுண்ட
பொருட்களைப் போல்
வீடு அலங்கோலமாகக் கிடக்கிறது!

நீ தூங்கும் நேரமோ மண் மரம்
செடி கூட மவுன விரதம் அனுஷ்டிக்கின்றன!
என் செல்லமே நீயும் வளர்வாய்

காமம், கோபம், குரோதம், வெறுப்பும், விரோதம்
கயமைஅத்தனை உணர்வும்
உன்னையும் ஆட்டிப் படைக்குமே
என்னும் போது
இதயம் ஏனோ வலிக்கிறது!

ம. நித்யா
முதலாண்டு தமிழ் இலக்கியம்



Scanned by CamScanner

## தாய்மை

கருவறையில் சுமந்தாள் அவள்
அன்பெனும் அரவணைப்பில் வளர்த்தாள் அவள்
இந்த பூமியில் உன் பாதங்களை பதிக்கக் காத்திருந்தாள் அவள்
உன் தவறுகளை உனக்குச் சுட்டிக் காட்டி
உன்னை நேர்வழியில் செல்லச் செய்தாள் அவள்
உனக்காக உயிரையும்தரும் ஆற்றலையும், துணிவையும்
கொண்டவள் அவள்
பண்பையும், பாசத்தையும் ஊட்டி மனிதனாக்கினாள் உன்னை
இப்படிப்பட்ட உன் தெய்வம் இன்று ஆதரவற்று நிற்பதா...
அதைக்கண்டு நீ மௌனமாக வாழ்வதா
அவள் உன் வீட்டில் இருக்க வேண்டிய விலைமதிப்புள்ள
பொக்கிஷமல்லவா...
உன் பொக்கிஷத்தை ஏன் இன்று முதியோர் இல்லத்தில் விட்டு
மறைந்தாய்
மனிதா சற்றே சிந்தித்துப்பார்...

ர. மனர்விழி
முதலாண்டு ஆங்கில இலக்கியம் (அரசுநிதி)

## எல்லாம் அறிவியலே

இவ்வுலகில்
மனிதன் பிறக்க உதவுவதும் அறிவியல் தான்
மனிதன இறந்த பின உதவுவதும் அறிவியல் தான்

நோய்களின் தாக்கத்தை
குறைத்ததும் அறிவியல் தான்
அதிகப்படுத்தியதும் அறிவியல் தான்

பெண்களுக்கோ வருத்தம்,
குழந்தை இல்லையென்றால் மடி
அறிவியல் உலகிலோ
டெஸ்ட் டியூப் பேபி





இவ்வுலகத்தை
காலத்திற்கேற்ப மாற்றியதும் அறிவியல் தான்
இனி,
இவ்வுலகமேஅறிவியலின் காலடியில் தான்

இரா. ரேணுகா தேவி
முதலாண்டு வேதியியல்

## மாணவர்கள் போதும்

தூரத்தில் வருபவனைக் கண்டேன் - கண்ணை
மூடி திறப்பதற்குள் விபத்து
காரணம் - கைப்பேசி.

தண்ணீர் பிடிக்க நின்று நின்று
தண்ணீர் பிடிக்க நின்ற - எனக்கே
தாகம் எடுத்துவிட்டது.

நின்றேன் இன்னும்
நின்றுகொண்டே இருக்கிறேன்
அதுவும் சாலை ஓரத்தில்
சாதிச்சான்றிதழ் வாங்க!!!

நிற்கவைத்து உயிரோடு வெட்டினார்கள்
நின்று கொண்டிருந்தவரின் வயதைக் காண்பதற்கு
அவர் தான் - மரம்.

ஓசோனின் ஓட்டையை
ஒட்டமுடியாது
காரணம் ஒட்டுவதற்குள்
ஓசோனே இருக்காது.

இத்தனை தவறுகளுக்கும்
காரணம் - மக்கள்
இத்தனை தவறுகளையும்
தவிர்க்க மாணவர்களுக்கு
அறிவுரை மட்டும் போதும்
இப்போது தவறுகளை
தவிர்க்க மாணவர்கள் போதும்.

செ. பிரியா
முதலாண்டு விலங்கியல்



Scanned by CamScanner

# கல்விச் சுற்றுலா

26.09.2014 அன்று கவிமணி இலக்கியம் பயிலும் மாணவியருடன். சென்றுவந்த கல்விச்சுற்றுலா குறித்த மாணவியர் கருத்து.

சென்று வந்த இடங்கள்

1. கோளரங்கம் - திருச்சி
2. பிரகதீஸ்வரர் ஆலயம் - தஞ்சாவூர்

திருச்சியில் கோளரங்கம் என்னும் இடத்தில் கோள்களில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றியும், அவற்றில் உள்ள நிலைமைகளைப் பற்றியும் ஒளி, ஒலி காட்சிகளைக் கண்டோம்.. நாங்கள் விண்வெளிக்கு சென்று வந்தது போலத் தோன்றியது. ஒவ்வொரு கோள் பற்றியும் அறிந்துகொண்டோம். கோளரங்கம் அறிவுப்பூர்வமான தகவல்களைப் பெறும் இடமாகவும், மிகவும் பயனுள்ளதாகவும் அமைந்திருந்தது. புது உலகிற்குள் சென்று வந்தது போன்ற மகிழ்வும் எங்கள் மனத்தில் தோன்றியது.

தஞ்சை பெரியகோவில் மிகவும் சிறப்பு வாய்ந்ததும் பழமையானதும் ஆகும். இராஜராஜ சோழன் மிக அழகாகவும் சிற்பங்கள் பல கொண்டும் இக்கோவிலைக் கட்டியுள்ளார். இராஜராஜ சோழனின் கலை ஆர்வம் மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும். அக்கோவிலில் உள்ள நந்தி தமிழ்நாட்டிலேயே மிகப்பெரிய நந்தியாகக் கருதப்படுகிறது. அந்நந்தியை தரிசிக்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.

அறிவியல் புதுமைகளையும், வரலாற்றுப் பெருமையினையும் அறிந்துகொள்ள வாய்ப்பு நல்கிய இந்தக் கல்விச் சுற்றுலா மிகவும் பயனுள்ளதாக இருந்தது. வாழ்வில் என்றும் மறக்க இயலாததாகவும் அமைந்தது சிறப்பு.





# துறை மேம்பாடுகள்

| பெயர் | நாள் | அமைப்பு | இடம் | தலைப்பு |
|---|---|---|---|---|
| வி. வசுமதி<br>னிணைப் பேராசிரியர் | 10.10.2014 | \னோன்மணியம் சுந்தரனார் : கலையும் கருத்தியலும் (தேசியக் கருத்தரங்கம) | மதுரை திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரி, திருநெல்வேலி | அன்புள்ள நண்பரே |
| மா.போ. ஆனந்தி<br>துணைப் பேராசிரியர் | 31.05.2014<br>&<br>01.06.2014 | இலக்கியங்களில் கண் புனைவியல் (தேசியக் கருத்தரங்கம) | விவேகானந்தா கல்லூரி, கன்னியாகுமரி | மணிமேகலையில் கண் புனைவியல் |



Scanned by CamScanner

## செந்தமிழ் மன்றச் செயல்பாடுகள் - ஜீன் 2014 - நவம்பர் 2014

| வ. எண். | நாள் | அமைப்பு | போட்டி & தலைப்பு | கலந்து கொண்டோர் & பரிசு பெற்றோர் |
|---|---|---|---|---|
| 1. | 20.06.2014 | வெற்றி தமிழர் பேரவை - வைரமுத்து மணிவிழா | பேச்சுப் போட்டி<br>கவிப்பேரரசு வைரமுத்து கவிதைகளில் அழகியலும் அறிவியலும்<br><br>கவிப்பேரரசு வைரமுத்து திரைப்பாடல்களில் செந்தமிழ் செழுமை | பா. ஜானகி<br>மூன்றாமாண்டு கணிப்பொறி பயன்பாடு<br><br>பா. அர்ச்சனா<br>இரண்டாமாண்டு கணிதம் |
| 2. | 27.06.2014 | மக்கள் சிந்தனைப் பேரவை - ஈரோடு புத்தகத் திருவிழா | பேச்சுப் போட்டி<br>மண் பயனுற வேண்டும் | ந. சுரேகா, கா.ந. லாவண்யா<br>இரண்டாமாண்டு வேதியியல் |
| 3. | 28.07.2014 | உழவாரம் திருப்பணி மன்றம் | பேச்சுப் போட்டி<br>மாங்கையர்க்கரசி என்னும் மாண்புறு நங்கை | ர. ஜீவிதா (முதல் பரிசு)<br>முதலாண்டு முதுஅறிவியல் கணிதம் |



| வ. எண். | நாள் | அமைப்பு | போட்டி & தலைப்பு | கலந்து கொண்டோர் & பரிசு பெற்றோர் |
|---|---|---|---|---|
| | | | அப்பூதிநாயனாரின் அறநெறிப் பணிகள்<br><br>கொள்கையில் சிறந்த இறையான் குமாற நாயனார்<br>கட்டுரைப் போட்டி<br>கொடையிற் சிறந்த இயற்பகையார் | மோ. பிரதீபா (மூன்றாம் பரிசு)<br>இரண்டாமாண்டு சரக்கு மேலாண்மை<br>பா. அர்ச்சனா (இரண்டாம் பரிசு)<br>இரண்டாமாண்டு கணிதம்<br><br>கா.ந. லாவண்யா (முதல் பரிசு)<br>இரண்டாமாண்டு வேதியியல் |
| 4. | 01.08.2014 | திருப்பூர் கம்பன் கழகம் | பேச்சுப் போட்டி<br>கம்பனின் கவிநயம்<br><br>கம்பன் செய்த பெண்மைப் புரட்சி | சௌ. ரஞ்சிதா<br>மூன்றாமாண்டு வணிகவியல்<br><br>மோ. பிரதீபா<br>இரண்டாமாண்டு சரக்கு மேலாண்மை |
| 5. | 16.08.2014 | விடியல் கலை இலக்கிய மன்றம் | கட்டுரை, கையெழுத்து, கவிதை, ஓவியப் போட்டிகள் | கல்லூரியிலிருந்து 61 படைப்புகள் அனுப்பப்பட்டன. |



Scanned by CamScanner

| வ. எண். | நாள் | அமைப்பு | போட்டி & தலைப்பு | கலந்து கொண்டோர் & பரிசு பெற்றோர் |
|---|---|---|---|---|
| 6. | 30.08.2014 | கவியரசர் கலைத் தமிழ்ச்சங்கம் | கவிதை, கட்டுரை, ஓவியம் (போட்டிகள்) | 07 படைப்புகள் அனுப்பப்பட்டன. |
| 7. | 06.09.2014 | பி.எஸ்.ஜி. பொறியியல் மற்றும் பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரி - ஜி.ஆர். தாமோதரன் நினைவு சுழற்கோப்பை - பேச்சுப்போட்டி | இளம் தலைமுறையினரின் பயணம் - சுதந்திரமான வளர்ச்சியே | இரா. ஜீவிதா முதலாண்டு முதுஅறிவியல் கணிதம் பா. ஜானகி மூன்றாமாண்டு கணிப்பொறி பயன்பாடு |

மாணவிகள் தங்கள் படைப்புகளை ஆர்வமுடன் அளித்து 'இளஞ்சுடர்' எழிலுற உதவுங்கள்.

ஆசிரியர் குழு : (தமிழ்த்துறை)






இளஞ்சுடர் இதழ் வெளியீட்டு விழா 14-07-2014
கல்லூரியின் செயலாளர் திருமதி. சுமதி கிருஷ்ணபிரசாத் அவர்களுடன் கல்லூரியின் முதல்வர் முனைவர் கோ.சுகுணா. உடன் இருப்பவர் கலைமாமணி திருமதி. ஆண்டாள் பிரியதர்ஷினி

Scanned by CamScanner



இளங்கலை தமிழ் முதலாண்டு மாணவியர் (2014 - 2017)

Scanned by CamScanner